**ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாத காலத்திற்கான விரிவான வருமானக் கூற்று, நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பு தொடர்பான கூற்று, அத்திகதியில் முடிவடைந்த 09 மாத காலத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 09 மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாத காலத்திற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் 2008 - 2015 கால எல்லையில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட ரூபா 10,003,442 கிரயமான 08 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு சொந்தமான பல்வேறு செயற்திட்டங்களிலும் காணப்படுகின்ற 08 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி என்ற நிலையான சொத்துக்களுக்கு இடையே 03 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன், எஞ்சியவைகளை நிலையான சொத்துக்கள் மெய்மெய்யாய்வு அறிக்கை தயாரிக்கும் போது விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளது. உரிய அறிக்கை பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன் போது விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் சொத்துக்கள் மதிப்பீட்டாளர் ஒருவரின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு விற்றுத் தீர்க்க வேண்டும் என பணிப்பாளர் சபை ஆலோசனை வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளின் சேவையினை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மதிப்பீட்டு திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளருக்கு விண்ணப்பித்த போதிலும், அதற்காக இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை விரைவாக மதிப்பீடு செய்து விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கந்தளாய் மணல் செயற்திட்டத்தில் மணல் அகழ்வுகளில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 29,280,420 ஆக இருந்ததுடன், அந்த வருமானத்தில் மஹாவலி கங்கையின் 03 பாதுகாப்பு அணை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 33,799,796 ஆகும். மேற்கூறப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் வருமானம் | கந்தளாய் சூரியபுர பிரதேசத்தில் மஹாவலி கங்கையின் பாதுகாப்பு அணை நிர்மாணித்தல் கந்தளாய் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை உடன்பாடொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக இருந்ததுடன், செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது அணை நிர்மாணப் பணிகளுக்காக ஒவ்வொரு மணல் கியுப்களிலும் தொகையொன்று புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக | வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன், வருமானத்தை விஞ்சி செலவினங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட முடியாது. |

| | |
|---|---|
| மற்றும் செலவின கணக்குகளில் தனித்தனியாக காண்பிப்பதற்கு பதிலாக ‘‘புனரமைத்தல் கந்தளாய்’’ என்ற பெயரில் கட்டுப்பாட்டு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மணல் விற்பனையினால் இந்த புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட வருமானத்தை விஞ்சி கம்பனியால் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட செலவினமான ரூபா 4,519,376 தொகை கிடைக்க வேண்டிய முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்டு அணை தயாரிக்கும் கொடுப்பனவுகளுக்குரிய தரப்பினருக்கு மேற்கொள்ளும் போது கணக்கு மீதியில் குறைக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிராகரம் இது மணல் அகழ்வுகளில் கிடைத்த வருமானமாக இல்லாததுடன், ஏனைய ஒவ்வொரு செயற்திட்டங்களிலும் அரைவாசி உள்ளடக்கும் வகையில் மஹாவலி அதிகார சபைக்காக ஏற்படுகின்ற கொடுப்பனவுகள் அரசிறை செலுத்துகைகள் வன சீவராசிகள் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் மணல் ஏற்றுபவர்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற பொறுப்பு கணக்குகள் மற்றும் சமமமான இந்த கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றது. அந்த நிதியத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,519,376 வரவு மீதி வைக்கப்பட வேண்டியது முற்பண கணக்கில் காட்டப்பட்ட போதிலும், கந்தளாய் மணல் செயற்திட்டத்தில் சகல மணல் இருப்புக்களும் விற்பனை முடிவின் போது உரிய தொகையை மேவுகை செய்துகொள்ளும் இயலுமை காணப்பட்டது. |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கடன் மீதி | 153,165 | 03 மணல் செயற்திட்டத்திற்காக 03 – 05 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்து செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 153,165 ஆக காண்பிக்கப்பட்டதுடன், அதற்குரிய எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கடன் மீதிக்காக எழுத்து மூல சான்றுகள் உரியவாறு பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய பெறவேண்டியவைகளுக்கு இடையே யான் ஓயசெயற்திட்ட அலுவலகம் மற்றும் புவிச்சரிதவில் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் விடுதி கட்டிடம் மனித வள தேவை மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொண்டு மதிவுரையாளருக்காக கம்பனியால் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 550,000 தொகை பணியகத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | யான்ஓயா மணல் செயற்திட்ட நிலத்தில் அலுவலகம் மற்றும் விடுதி கட்டிடங்கள் தொடர்பாகவும் மனித வள மதிப்பீட்டிற்குரிய புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் கம்பனிக்கு முறையே கிடைக்க வேண்டிய ரூபா 150,000 மற்றும் ரூபா 400,000 ஆகும். அந்த பணத்தை அறவிடுவதற்காக அதற்குரிய சகல ஆவணங்களினதும் பிரதிகளை உள்ளடக்கிய கடிதம் ஒன்று 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கபட்ட சேவைக்காக ஊழியருக்காக செலுத்தப்பட்ட ரூபா 24,988 தொகை அறவிடப்படாதிருந்ததுடன், அறவிட முடியாக்கடனாக பதிவழிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | புவிச்சரிதவில் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 24,987.78 தொகை அறவிட முடியாக் கடனாக பதிவழித்தல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஊழியத்திற்கு எமது கம்பனியினால் செலுத்தப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்யும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் உரிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. பணியகத்தினால் அனுப்பப்பட்ட விரிவான அறிக்கையில் விடயங்கள் காண்பிப்பதன் பிரகாரம் வெளிக்கள உதவியாளர் பதவிக்கு மேலதிக உரித்து காணப்படாதிருந்தமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் மேலதிக கொடுப்பனவு, பிரயாணம் மற்றும் இணைந்த படிகளுக்கு உரிய திகதிகள் தெளிவாக இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் உரிய பணம் அவர்களினால் செலுத்தப்படாதிருந்தது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 – 2018 காலப்பகுதியில் கம்பனியின் 03 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 198,970 முற்பணமும், மேலும் 05 உத்தியோகத்தர்களுக்கு 2018 – 2019 காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 1,050,695 கொள்வனவு செய்யும் முற்பணமும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள முற்பணத்தை தீர்த்து வைத்தல் தொடர்பாக உரிய தரப்பினருக்கு பல சந்தர்ப்பங்களில் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முற்பணங்களை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க சட்டத்தின் 40 ஆம் பிரிவு | கம்பனிக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் 09 மாத காலத்தில் உள்ளக கணக்காய்வு திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த 02 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் கம்பனியின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்படு நிலையில் காணப்படாமையின் காரணமாக நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆக்கபூர்வமாக செயற்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு தேவையான கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும் தற்போது கணக்காய்வு பிரிவு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையினால் கணக்காய்வு திட்டமொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு பிரிவின் ஏனைய நடவடிக்கைகளும் செயற்திறனாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். | சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1.2 ஆம் பந்தி | கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம், நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள், நிறுவன கட்டமைப்பு, திட்டமிடப்பட்ட காலத்தில் அடையப்பட வேண்டிய நோக்க இலக்குகள் மற்றும் பொறுப்புக்கள் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 – 2023 ஆம் ஆண்டுகளுக்கான ஐந்து வருட திட்டமொன்றாக கூட்டிணைந்த திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது நிறுவனத்திற்கு சொந்தமான காணி மற்றும் உற்பத்தி கட்டிடங்கள் எதுவும் காணப்படாதிருந்தமையால் அது கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. தற்போது நிறுவனத்திற்காக அங்கீகாரம் கிடைத்த நிறுவன கட்டமைப்பு காணப்படாதிருந்ததுடன், தற்போது நிறுவனத்தில் காணப்படுகின்ற நிறுவன கட்டமைப்புக்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 5.2.3 ஆம் பந்தி | கம்பனியால் கணக்குகள் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீட்டிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2021 சனவரி 25 ஆம் திகதியே கிடைத்திருந்தது. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 09 மாத காலப்பகுதிக்கான திருத்தப்பட்ட பாதீடு எங்களால் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்திகதி உரிய ஆவணங்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்ட அறிக்கையில் அது சரியாக விளங்கப்படாமையினால் 2021 சனவரி 25 ஆம் திகதியில் உள்ளவாறு உரிய பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கை மூலம் சரி செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) | 8.3.9 ஆம் பந்தி | கம்பனிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட இரண்டு | எமது கம்பனி எங்கள் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் விளம்பரத்தினை செய்து கொள்வதற்கு முயற்சிக்கப்பட்ட | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் 2020 செப்டம்பர் 10 ஆம் திகதி முதல் சுற்றாடல் அமைச்சுக்கு நியமிக்கப்பட்டு ரூபா 283,240 தொகை சம்பளம் மற்றும் படிகள் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனமாக இருந்த போதும் தற்போது தொழில்நுட்ப சேவை வழங்கல் நிறுவனம் ஒன்றாகவும், எங்கள் கம்பனியின் சேவை பெறுனர்களுக்கு இடையில் அதிக தரப்பினர் எங்கள் சேவைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக முதன்மையான திட்டமாக அமைச்சின் முன்னிலையில் இனங்காணப்பட்டுள்ளது. அதனால் அமைச்சுடன் நிரந்தர தொடர்பொன்றை கட்டியெழுப்புவதற்காக அமைச்சின் செயலாளருடன் நிரந்தர தொடர்பு ஒன்றை பேணிச் செல்லும் தேவையொன்று கம்பனிக்கு காண்பபட்டது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் இருவரினதும் உதவியை பெற்றுக்கொள்வதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தனர். விஷேடமாக கொட்டிகம்பொக்க பளிங்கு அகழ்வு செயற்திட்டம் பலாங்கொடை கெல்சைட் செயற்திட்டம் மற்றும் சனாதிபதி செயலாற்றல் படையணியின் சிபாரிசின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற மணல் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம் போன்ற நடவடிக்கைகளை தொடர்புபடுத்தும் பணிகளுக்காக இந்த நபர்களின் செயற்திறனுள்ள பங்களிப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டதையும் விருப்பத்துடன் தெரியத்தருகின்றோம். சுற்றறிக்கையை மீறாமல் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (இ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2020 சனவரி 31 ஆம் திகதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் 09 மாத காலத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 43,290,584 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான இலாபம் 37,887,098 ஆகும். அதன் பிரகாரம் 09 மாத காலத்தில் நிதி விளைவுகளில் ரூபா 81,177,682 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது இந்த வீழ்ச்சிக்கு மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டத்தில் இருந்து கிடைத்த வருமானம் குறைவடைந்தமை, அரலகன்வில, போஅத்த, நிதன்வல மற்றும் வெலிகந்த போன்ற மணல் செயற்திட்டங்களில் இருந்து எந்தவொரு வருமானமும் பெறப்படாமல் செலவினம் மாத்திரம் செய்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | | | |
| (i) | செயற்திட்டத்தில் காணப்பட்ட கொள்கலன் பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதில் பொருத்தப்பட்டிருந்த வளிப்பதனாக்கி முறைமை ஏதோ ஒரு தரப்பினரால் எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. கணக்காய்வினால் 2020 செப்டம்பர் 10 ஆந் திகதி கம்பனிக்கு இந்த தொலைந்து போனமை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 மே 17 ஆந் திகதி வரையும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை இனங்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மன்னம்பிட்டி இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கும் போது அந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக இந்த கொள்கலன் பெட்டி அந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் நுழைவு வீதியை பெற்றுக் கொள்ளும் போது எதிர்பார்க்கப்பட்ட இடத்தினை பெற்றுக் கொள்வதற்கு வன சீவராசிகள் அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்படாமை மற்றும் முன்திட்டமிடப்பட்ட முறைமைக்கு மாற்றமான முறைமையொன்றில் மணல் விநியோகித்தல் மேற்கொள்ளப்படதன் காரணமாக இரண்டாவது கட்ட அலுவலக தேவைக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. கொள்கலன் வளிப்பதனாக்கி இயந்திரம் ஒன்று காணப்படாமை தொடர்பாக கடிதம் ஒன்று<br><br>பிரதான அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்ததுடன், இது தொடர்பான விடயங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொலன்னறுவை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட பிபிதெமு பொலன்னறுவை செயற்திட்டத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட மணலுக்காக ரூபா 1,115,576 தொகை 2021 யூன் 11 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு இருந்தது. | பிபிதெமு பொலன்னறுவை நிகழ்ச்சித் திட்டத்திற்காக விநியோகிக்கப்பட்ட மணலுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 3,576,208 பெறுமதியில் 2021 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையில் ரூபா 2,460,631 தொகையொன்று கிடைத்திருந்தது. எஞ்சிய பெறுமதியை அறவிடுவதற்காக பொலன்னறுவை மாவட்ட செயலகத்திற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | இந்த பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடனைத் தீர்க்கும் காலம் 06 மாதங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 34,828,901 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தை உள்ளக்கிய ஏனைய நிறுவனங்களின் கம்பனிகளுக்கு கிடைக்க வேண்டிய 06 மாதங்களை விஞ்சிய ரூபா 43,561,337 மீதியை அறவிடுவதற்காக அவர்களுக்கு கடிதம் மூலமும் உரையாடல் மூலமும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டிருந்ததுடன், உரிய மீதியை கூடிய விரைவில் அறவிடுவதற்காக தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கடனை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்னம்பிட்டி மணல் செயற்திட்டம் | | |
| (i) | கம்பனியால் மணல் விநியோகிப்பதற்கு நியாயமான குறித்த திட்டமுறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டத்தின் அகழ்வு செய்யப்பட்ட மணலில் 75 சதவீதம் பொலன்னருவை மஹவலி எக்ஸத் டிப்பர் வாகன கம்பனியின் லொறி வாகனத்திற்காகவும் 10 சதவீதம் பொலன்னறுவை மாவட்டத்தில் ஏனைய லொறிகளுக்காகவும் 15 சதவீதம் மாவட்டத்தில் இருந்து வெளியிலுள்ள | 2021 ஆம் ஆண்டின் போது மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் மூலம் மணல் பெற்றுக் கொள்ளும் திட்டம் முறைமைப்படுத்தப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. அதன் போது ஒட்டுமொத்த மணல் அளவிலும் 15 சதவீதம் நிறுவனத்தின் மணல் தளம் மற்றும் நிறுவனத்தின் மூலம் கொண்டு செல்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 85 சதவீதம் டோக்கன் முறைமையின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு டோக்கன் முறைமையில் மணல் வழங்கும் போது, | மணல் விநியோகிப்பதற்குரிய குறித்த திட்ட முறைமையொன்று எழுத்து மூலம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லொறிகளுக்குமாகவும் மணல் விநியோகிக்கப்பட்டிருந்தது.<br>அதற்கு மேலதிகமாக அரசியல் கோரிக்கைகள் பொது மற்றும் சமய நடவடிக்கைகளுக்கான கோரிக்கைகள் மற்றும் ஏனைய விண்ணப்பங்களை உள்ளடக்கி முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் தினந்தோறும் மணல்<br>விநியோகிக்கப்பட்டிருந்தது. | 1 - பொலன்னறுவை மாவட்டத்திற்காக பதிவு செய்யப்பட்ட 03 கியூபிற்கு மேற்பட்ட டிப்பர் வாகனம்<br>2 - பொலன்னறுவை மாவட்டத்திற்காக பதிவு செய்யப்பட்ட 03 கியூபிற்கு குறைந்த டிப்பர் வாகனம்<br>3 - பொலன்னறுவை மாவட்டத்திற்கு வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள டிப்பர் வாகனங்கள்<br>என்ற 03 வாகன தொகுதியின் கீழ் மணல் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருகின்ற டிப்பர் வாகன நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டு அந்த டிப்பர் வாகன எண்ணிக்கைக்கு சமனான வகையில் மற்றும் சகல டிப்பர் வாகனங்களுக்காகவும் சமமான சந்தர்ப்பமொன்று கிடைக்கும் வகையில் 85 சதவீதம் ஆன மேற்கூறப்பட்ட 03 தொகுதியின் கீழ் தனித்தனியாக விநியோகிக்கப்படுகின்றது. | |
| (ii) | மீளாய்வாண்டின் போது மணல் அகழ்வு செயற்திட்டத்தில் கட்டம் II இல் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை<br>. | மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் செயற்படு நிலைக்குரிய சகல பரிந்துரைகளும் மற்றும் வழிகாட்டல்களும் சுற்றாடல் ஆய்வு தொடர்பான பேராசிரியரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவதுடன், மன்னம்பிட்டி பின்தொடர் ஆய்வு நடவடிக்கைகள் குழுவின் மூலம் செய்யப்படுவதுடன், அந்த குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீங்கிச் சென்றதுடன், பின்தொடர் நடவடிக்கைகளின் செயற்படு நிலை தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த பதவிக்காக புதிய தலைவர் ஒருவரை நியமிப்பதற்காக கம்பனி வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கோரிக்கை விடுத்திருந்தது. உரிய நியமனங்கள் மேற்கொண்டு பின்தொடர் நடவடிக்கைகளின் குழு செயற்படு நிலைக்கு உட்பட்வுடன் அந்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மீண்டும் மன்னம்பிட்டி இரண்டாவது கட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பின்தொடர் நடவடிக்கைகள் குழு விரைவாக நியமிக்கப்பட்டு மீண்டும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 ஆம் ஆண்டில் செயற்திட்ட அலுவலகத்தில் ஏற்பட்ட தீப்பிடித்தல் தொடர்பாக பொலிஸ் அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் இந்த தீப்பிடித்தல் எதிர்பாராத விதமாக ஏற்படாதிருந்ததாகவும், கொள்கலன் பெட்டிகளில் காணப்பட்ட ஆவணங்களில் பொற்றோல் இட்டு வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்டு தீ வைப்பதற்கு தீ வைக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 நவம்பர் 19 ஆம் திகதி தீ ஏற்பட்டதுடன், அதில் சேவையில் ஈடுபட்டிருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் தொடர்பாக இலங்கை பொலிஸ் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன், அந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமரா முறைமை செயலிழந்து காணப்பட்ட போதிலும், அந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஸ்தாபிக்கப்பட்ட கம்பனி எங்களுக்கு வழங்கியிருந்த பொறுப்பு உத்தரவாத காலத்தையும் விஞ்சியிருந்தமையினால் எங்களினால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு முறைப்பாடுகள் அதனை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், அவர்கள் மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீப்பிடித்தல் ஏற்பட்ட திகதி பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் ஒரு தரப்பு அந்த இடத்தை அவதானித்ததன் பின்னர் இது வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட தீ வைத்தலாக உள்ளமையினால் பக்கச்சார்பின்றி பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு பொலிஸிக்கு கையளிப்பது பொருத்தமானது என உத்தேசிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தலைவரின் கையொப்பத்துடன் அது தொடர்பாக இலங்கை பொலிஸில் கோரிக்கை விடப்பட்டதுடன், உள்ளக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொலிஸ் அறிக்கை மூலம் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தீ வைப்பாக அறிவித்திருந்தமையினால் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் செயற்திட்டத்தில் மணல் அகற்றுவதற்கு ஈடாக அமுல்படுத்தப்படுகின்ற 03 வெள்ள பாதுகாப்பு அணைக்கட்டுக்களை நிர்மாணிக்கும் வேலை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளின் பரிந்துரைக்காக கம்பனியால் அணை நிர்மாணம் தொடர்பாக சிறந்த அனுபவம் ஒன்று இன்றிய பயிலுனர் பொறியியலாளர் ஒருவர் | விசேட செயற்திட்ட முகாமையாளரினால் சிவில் பொறியியலாளரை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும், அந்த கால எல்லையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாததாக தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தமையினால் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும், தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தினால் அனுமதி | உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் குறித்துரைத்த நியமங்களின் பிரகாரம் வேலை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டமைக்கு உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறுகிய காலத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததார். அவரின் சேவைக்காலத்தில் வேலைகள் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டதுடன், சேவையில் இருக்காத காலத்தில் செய்யப்பட்ட வேலைகள் உறுதிப்படுத்தப்படால் ரூபா 47.79 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது குறித்த நியமங்களின் பிரகாரம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மஹாவலி அதிகார சபையினாலும் நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளரினாலும் கொடுப்பனவு ஆவனங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டவுடன், சிவில் பொறியியலாளர் ஒருவர் சேர்க்கப்பட்டதுடன், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. பக்க சுவர்கள் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது சுவர்களில் அடிபிரதேசத்தில் வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்தல் மாத்திரம் மேல் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. நீர் பாசன திணைக்களம், இலங்கை மஹாவலி அதிகார சபையின் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினதும் ஆலோசனைப்படி எங்களின் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு சென்றதுடன், அவர்களின் பங்களிப்பு அவர்களின் தலைமையிலும் ஆலோசனை மற்றும் வழிகாட்டிகளின் கீழ் எமது இந்த சிவில் பொறியியலாளர் செயற்பட்டிருந்தார். எவ்வாறாயினும், நீர் பாசன திணைக்களம் மற்றும் இலங்கை மஹாவலி அதிகார சபையின் பொறியியலளார் சம்பவத் திரட்டு புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிர்மாணங்களின் பூர்த்திகளை உறுதிப்படுத்தித் தருமாறு நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மஹாவலி அதிகார சபையில் எழுத்து மூல கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் பின்னர் அந்த அரச நிறுவனங்களின் வேலை உறுதிப்படுத்திப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 8,883,520 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்ட லோடர் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 966,565 தொகை | 2016 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதி முதல் லோடர் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டதுடன், அதன் பின்னர் இனங்காணப்பட்டதுடன் அதன் பழுதுபார்த்தல்களின் இயலுமை தொடர்பாக கண்டறியப்பட்டிருந்தது. அதன் | பழுதுபார்த்தல்கள் சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கோ |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்ட போதிலும், 2021 யூன் 10 ஆம் திகதி வரையிலும் அது எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாத நிலையில் காணப்பட்டது. | போது இயந்திரத்தின் மிகுதி பகுதிகளை பழுதுபார்ப்பதற்காக எஞ்சினொன்றை பெற வேண்டியமை பழுதுபார்ப்பவர்களினால் குறிப்பிடப்பட்டதன் காரணமாக எஞ்சின் பழுதுபார்க்கப்பட்டது. அதன் பின்னரும் இயந்திரத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.<br><br>தற்போது வரையில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், மீள்மதிப்பீட்டிற்காக அரசாங்க மதிப்பீட்டாளரின் சேவையை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மதிப்பீட்டு திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளருக்கு கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும், அதற்காக இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிக்கந்த, அரலகன்வில, போஅத்த மற்றும் நிதன்வெல போன்ற மணல் செயற்திட்டங்களில் மணல் அகழ்வினால் சமூக சுற்றாடல் பாதிப்புக்கள் தொடர்பாக முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படும் வரை மஹாவலி அதிகார சபையினால் காணி விடுவித்தல் கைவிடப்பட்டிருந்தது. இந்த காலத்தில் அந்த செயற்திட்டங்களில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 8,213,347 தொகை பயனற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தது. | வெலிக்கந்த, அரலகன்வில, நிதன்வெல, போஅத்த போன்ற செயற்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் போது உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல் செய்யப்பட்டு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதா இல்லையா என தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உரிய பதவியணியினர் 2020 ஆம் ஆண்டில் அவர்களை அங்கு அமர்த்தி வைப்பதற்கு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தீர்மானத்திற்கு உடன்பட்ட நிறுவனத்தினால் அந்த ஊழியர்களின் ஒப்பந்த காலம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தினால் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து மஹாவலி அதிகார சபையில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 யூன் 01 ஆம் திகதி முதல் வெலிக்கந்த, அரலகன்வில, நிதன்வல, போஅத்த போன்ற செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் மூலம் செயற்திட்டங்கள் தொடர்பாக விரைவாக தீர்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(ஆ) **கொடிகம்பொக்க பளிங்கு செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த திருவான நிதிய அகழ்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்றுமதி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) இற்கு பதிலாக மீண்டும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையொன்று (IEE) மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைக்காக சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் நீர் பாசன திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் ஏற்பட்டிருந்தமையினால் இந்த செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடிகம்பொக்க பளிங்கு அகழ்வு செயற்திட்டம் 2011 ஆம் ஆண்டில் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட போதும் இந்த செயற்திட்டத்திற்கு தேவையான அங்கீகாரம் உரி யஅரச நிறுவனங்களில் இருந்து கிடைக்காமையின் காரணமாக ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. 2019 ஒக்டோபர் மாதத்தில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்வதற்கு பதிலாக ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மேற்கொள்ளல் போதியளவாக உள்ளதா என மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. | செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்வதற்கு பதிலாக ஆரம்ப சுற்றாடல் அவதானிப்பு ஒன்று மேற்கொள்ளல் போதியளவாக உள்ளதா என்பது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும், வன பாதுகாப்பு திணைக்களத்தினதும் முதலாவது இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுமாறு மீண்டும் 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்த போதும் மீளாய்வாண்டின் இது வரையிலும் அது தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது வரையில் இந்த செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப சுற்றாடல் அறிக்கையில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அமைச்சரவை ஆலோசனையின் பிரகாரம் எங்களால் இதற்காக ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை போதியளவாக உள்ளதா என தெளிவுபடுத்திக் கொள்வதற்காக எழுத்து மூலம் அந்த அரச நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி விரைவாக தீர்மானத்தை எடுத்து செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தில் இருந்து எந்தவொரு வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன், அகழ்வு செய்யப்பட்ட திருவானா களஞ்சியப்படுத்துவதற்காக காணியொன்றை வாடகைக்கு பெறல் அகழ்வு செய்யப்பட்ட திருவானாக்களின் நிறையை அளவிடுவதற்காக பால தராசொன்று கொள்வனவு செய்தல் மற்றும் அதன் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு ஊழியர்களை ஈடுபடுத்தல் உள்ளடங்கிய மீண்டெழும் செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்களாக ரூபா 2017-2020 காலப்பகுதியில் ரூபா 20,942,314 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அகழ்வு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருந்ததுடன், 2017 மார்ச் மாதம் கிடைக்கப் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்கும் வகையில் மீண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் செயற்திட்டத்தை ஆரம்பிதற்கு தாமதமடைந்தமை 2017 வரையில் பெறப்பட்ட சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆய்வுகள் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றாமல் ரூபா 7,539,000 பெறுமதியில் 06 மைக்ரோ மீற்றர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த மைக்ரோ மீற்றர் இயந்திரம் சந்தையில் விற்பனைக்காக உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட உரித்து (Manufacturer authorization) உடன் கண்டறியப்பட்ட நிறுவனமாக இருக்கவில்லை. இந்த இயந்திர மீற்றர் முன்னர் எமது கம்பனிக்கு கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன், முதலாவது தடவையாக பெறுவனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் சரியான கிரய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கு தேவையான மூலங்களை கண்டறிந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் பெறுகை நடவடிக்கைகள் ‘‘தேசிய போட்டியாளர் கேள்வி கோருதல்’’ முறைமை மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் கீழ் ‘‘தேசிய போட்டியாளர் கேள்வி கோருதல்’’ முறையில் பெற வேண்டிய ஆகக்குறைந்த கேள்வி அளவு குறிப்பாக காண்பிக்கப்படாதிருந்தமையையும் குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட நிலம் தோன்றும் இயந்திரத்திற்காக இணைய தளத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 4,925,000 கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று ரூபா 12,823,960 தொகையில் கொள்வனவு செய்யும் போது வரிசை அமைச்சினால் பெறுகைகளில் காணப்பட்ட குறைபாடுகளை அறிவிக்கும் அடிப்படையில் அந்த கொள்வனவுகள் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் மீண்டும் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் முன்னைய கூறுவிலைகள் சமர்ப்பித்த வழங்குனரிடம் இருந்து ரூபா 9,733,650 தொகையில் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழங்குனர் தொடர்பாக இணைய தளத்தில் தகவல்களை பரீட்சிக்கும் போது போதியளவான தகவல்கள் காணப்படாதிருந்ததுடன், ஆரம்ப கிரய மதிப்பீடு மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கிடையே ரூபா 4,808,650 வேறுபாடொன்று காணப்பட்டது. | அதற்கு முன்னர் பெறுகை நடவடிக்கைகளின் போது கிரய மதிப்பீடு இணயதள தகவல்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டமையினால் சரியான கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இணையதளத்தை பயன்படுத்தி அல்லது கிரய மதிப்பீடொன்றை தயாரித்து பெறப்பட்ட இந்த நிலம் தோன்றும் இயந்திரம் சந்தையில் விற்பனைக்காக உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட உரித்து (Manufacturer authorization) உடன் இலகுவாக கண்டறியக் கூடிய நிறுவனமாக இல்லாதிருந்தமை காரணமாகும். எவ்வாறாயினும், அந்த பெறுகை நடவடிக்கைகளில் காணப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக வரிசை அமைச்சு பெறுகைகளுக்காக இறுதி தீர்மானத்தை பெற்று மேலதிக செயலாளரின் அங்கீகாரம் இந்த முதலாவது பெறுகைகளுக்காக கிடைத்திருக்கவில்லை. அதன் பின்னர் மீண்டும் ஒரு தடவை கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், அதன் போதும் கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்காக மூலமொன்று காணப்படாதிருந்தமையின் காரணமாக ‘‘தேசிய போட்டியாளர் கேள்வி கோருதல்’’ முறையின் மூலம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் ஏதாவது ஒரு பெறுகையில் இருந்து விலகுதல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு முன்னர் பெறுகைகளுக்காக பயன்படுத்தப்பட்ட கேள்வி ஆவணத்தில் தகவல்கள் மாற்றப்பட்டு மீண்டும் கூறுவிலை கோர வேண்டியிருந்தமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், எங்களின் தேவையின் அடிப்படையில் உரிய இயந்திரத்திற்கான பெறுகைகள் சாதாரணமான வெளிப்படுத்தல்களில் காண்பிக்கப்பட்டள்ள மற்றும் பெறுகைகள் மதிப்பீட்டின் போது உரிய இயந்திரத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட நியதிகளை பூர்த்தி செய்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட நாடு தொடர்பான விடயங்களையும் கவனத்தில் கொண்டு உரிய | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | நியதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த கேள்வியுடன் சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்ட சகல கோவைகளும் உரிய கம்பனியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினால் இணையதளத்தை பரீட்சிப்பதற்கான தேவை காணப்படவில்லை. | |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,512,342 பெறுமதியான பொல்கோள் துலையிடும் இயந்திரம் மற்றும் அதன் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது 2006 சனவரி 25 ஆம் திகதி பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.1, 4.3.1 மற்றும் 3.2.2 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்காக பொறியியலாளர் / புவிச் சரிதவியல் ஆய்வு என்ற உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததார். பல்வேறு செயற்திட்டங்களுக்காக சேவையின் அவசர தேவையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் நிறுவனத்தில் இருந்த சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகும். அதன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் கூட்டத்தினை நடாத்துவதற்கு முடியாதிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம்.<br><br>அவ்வாறே மேற்கூறப்பட்ட 2.2.4 இன் (அ) மற்றும் (ஆ) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1. ஆம் பிரிவின் பிரகாரம் கிரய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கும் தேவையான மூல அடிப்படையினை கண்டறிந்து கொள்வதற்கும் வசதியீனமாக இருந்தமையை மேலும் அறியத்தருகின்றோம். அவ்வாறே போர்கோல் இயந்திரம் மற்றும் இதன் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை செயற்பாடுகளின் போது கம்பனியினால் தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல்களை பிரசுரிப்பதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் இணையதளத்திலும் அறிவித்தலை பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமையை தெரிவித்துக் கொள்கின்றோம். | -மேற்படி- |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 யூன் 11 ஆம் திகதி வரையிலும் கம்பனிக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஒன்று காணப்படாதிருந்ததுடன், செயற்திட்ட அலுவலகம் மற்றும் வேலைத்தளங்களில் 29 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நிறுவனத்தினால் மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக வேலை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு பணிக்காகவும் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது 34 ஊழியர்கள் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஊழியருக்கும் கையளிக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக வேலை விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் பணி கையளித்தல் அடிப்படையில் சேவையாற்றிய 2020.12.31 ஆம் திகதியில் சேவை கையளித்தல் முடிவடைந்த 05 ஊழியர்களின் சேவைக்காலம் 2021.01.01 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) (i) | 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்த 175 ஊழியர்களுக்கு மேலதிகமாக மேலும் 69 பதவிகள் முன்மொழியப்பட்டு மொத்தமாக 224 பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இந்த கம்பனி கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவி செய்யப்பட்டிருந்தமையினால் நிறுவனம் சார்ந்த பதவி அணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு சட்ட ரீதியான இயலுமை தொடர்பாக கண்டறிந்து தேவையான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக 2019 செப்டம்பர் 06 ஆம் திகதிய கடிதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதும், 2021 | தேசிய கணக்காய்வு நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன், கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கம்பனி தொடர்பாக உள்ள சட்ட ரீதியான இயலுமை தொடர்பாக கண்டறிய வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்டிந்ததுடன், அதன் போது கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் சரியான அனுபவமுள்ள ஆலோசனையாளர் ஒருவரின் சேவை பெறப்பட்டிருந்தது. அந்த ஆலோசனையாளர் முகாமையாளருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது கம்பனியின் தற்போதைய செயற்படு நிலைக்காக மற்றும் எதிர்கால வியாபார சந்தர்ப்பமொன்றை எதிர்வுகூறி | பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூன் 11 ஆம் திகதி வரையிலும் குறித்த தீர்மானம் ஒன்று கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நடவடிக்கைகளுக்காக 224 பேர்களை உடைய பதவியணியினரின் தேவை உள்ளது என இனங்காணப்பட்டிருந்தது. இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முழுமையான செயற்பாடுகள் பூரணமாக முடிவடையாமல் இருந்தமையினால் இந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவதில் பிரச்சினைக்கு மாற்று வழியாக தற்போதுள்ள வியாபார நடவடிக்கைகள் செயலிழந்து போகாத வகையில் நடாத்திச் செல்வதற்கு தேவையாக ஆகக் குறைந்தது 62 ஊழியர்களை உடைய திட்டமொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்காக தேவையான அமைச்சரவை பத்திரமொன்று தற்போது சுற்றாடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | உள்ளக கணக்காய்வு உதவியாளர் பதவிக்கு சேர்க்கப்பட்டிருந்த நபர் ஒருவர் 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக வரிசை அமைச்சின் அமைச்சரின் அலுவலகத்திற்கு 2020 செப்டம்பர் 10 ஆம் திகதி முதல் விடுவிக்கப்பட்டு கம்பனியால் ரூபா 148,040 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. கம்பனியின் உதவி கணக்காளர் 2020 திசெம்பர் 02 ஆம் திகதி முதல் முறையான நடைமுறையின்றி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் வெற்றிடமாக உள்ள உதவி கணக்காளர் பதவி 2021 யூன் 11 ஆம் திகதி வரையிலும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த உள்ளக கணக்காய்வு உதவியாளர் முகாமைத்துவ உதவியாளர் தொகுதியில் இருந்தமையினால் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நிறுவனத்தில் காணப்படாதிருந்தமையினால் உரிய கணக்காய்வு உதவியாருக்கு நேரடியாக பொறுப்புக்களை கையளிப்பதற்கு முன்னர் முடியாதிருந்தது. அமைச்சடன் எமது நிறுவனத்தின் செயற்திட்ட நடவடிக்கைகளை பின்தொடர் நடவடிக்கைகள் செய்தல் மற்றும் ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மற்றும் நிறுவனத்தின் நலனோம்பல்களை கருத்தில் கொண்டு கணக்காய்வு உதவியாளர் தற்காலிகமாக சுற்றாடல் அமைச்சிற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>அவ்வாறே நிறுவனத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக சரியான அறிவு மற்றும் அனுபவம் உள்ள | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒரேயொரு உத்தியோகத்தர் முன்னால் கணக்காளர் ஆக இருந்தமையினால் தற்போது எழுந்திருந்த கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். | |
| (iii) | கம்பனியின் கணக்காளர் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்கு காணப்பட்ட பரீட்சையில் புள்ளி வழங்கும் போது நேர்முகப் பரீட்சை சபைக்கு சமூகமளிக்காத அங்கத்தவர் ஒருவர் புள்ளி வழங்கியமை, நேர்முக பரீட்சை சபையில் இருந்த அங்கத்தவர் மதிப்பீட்டு பத்திரத்திற்காக புள்ளி வழங்காமை, இறுதி புள்ளி பதிவில் மாத்திரம் கையொப்பமிட்டிருந்தமை, பென்சிலால் புள்ளியிடப்பட்டு பின்னர் பேனையினால் இடப்பட்டமை மற்றும் புள்ளிகள் மாற்றப்பட்டிருந்தமை போன்றவை ஏற்பட்டிருந்தமையின் காரணமாக முறையற்றதாக நேர்முகப் பரீட்சை நடாத்தி இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | நேர்முக பரீட்சை சபைக்காக பெயர் குறிப்பிடப்பட்ட மனித வள ஆலோசகர் திருமதி. ராணி குணரத்தின அவர்களுக்கு இத்திகதியில் அவசர கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபட்டிருந்ததுடன், அவருக்கு பதிலாக எமது கம்பனியின் மனித வள முகாமையாளர் நேர்முக பரீட்சை சபையில் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டிருந்தார். நேர்முக பரீட்சை சபையில் சகல அங்கத்தவர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் புள்ளிகள் பதியப்பட்டிருந்ததுடன், கணக்காளராக தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் அனுபவம் மற்றும் தகைமைகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் புள்ளி பதியும் பத்திரத்திற்காக பேனை மற்றும் பென்சிலை பயன்படுத்தியமை காரணமாக இந்த முறையற்ற செயற்பாடு கணக்காய்வினால் அவதானிக்கப்பட்ட போதும் நியாயமான மற்றும் வெளிப்படையாக மேற்கூறப்பட்ட நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நிறுவனத்தினால் நடாத்தப்படும் சகல நேர்முகப் பரீட்சை குறைபாடுகளையும் மாற்றியமைக்கும் வகையில் மிகவும் முறையாக நடாத்தப்படும். | சட்ட விதிகளின் கீழ் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |